DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
CC. No.1377/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கண்ணாத்தாள் | க-பெ | கருப்பையா |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 49/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டு வேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.06.2026

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வீட்டு வேலை செய்து வருகிறேன். கடந்த 06.08.2019 அன்று குன்றக்குடி பிள்ளையார்கோவிலுக்கு செல்வதற்காக காரைக்குடி புதிய பேருந்து நிலையத்தில் பேருந்தில் செல்வதற்காக விடியற்காலம் 5.00 மணிக்கு நின்று கொண்டிருந்தேன். என்னுடன் ஜெயா நின்று கொண்டிருந்தார். அப்போது எனது சின்னம்மா பெரியநாயகி பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தார். சம்பவ நேரத்தில் பின்னால் வந்த பேருந்து ஒன்று அவர் மீது மோதி அவர் கீழேவிழுந்துவிட்டார். அங்கிருந்த ஆட்கள் அங்கு வந்து அவரை பார்த்தபோது அவருக்கு பின்னந்தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. காயம்பட்ட அவரை ஆம்புலன்ஸில் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். அங்கு பார்க்க முடியாது என்று சொல்லிவிட்டதால் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். அங்கிருந்து மதுரை வேலாம்மாள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக தெரிந்து கொண்டேன். நான் பின்னர் வீட்டிற்கு சென்று விட்டேன். இரண்டு மூன்று நாட்கள் சிகிச்சையில் இருந்த அவர் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். கோவிலுக்கு செல்லும் நிலையில் இருந்ததால் பேருந்தின் ஓட்டுநர் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

குன்றக்குடி கோவிலுக்கு செல்வதாக கூறியதை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்து போன பெரியநாயகி எனக்கு என்ன வேண்டும் என்றால் சின்னம்மா. எந்த பேருந்து மோதியது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் இறந்த நபர் எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.17 10:45:21 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
CC. No.1377/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஜெயா | க-பெ | சொக்கலிங்கம் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 40/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.06.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். அசா1 எனது பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 06.08.2019 அன்று குன்றக்குடி பிள்ளையார்கோவிலுக்கு செல்வதற்காக காரைக்குடி புதிய பேருந்து நிலையத்தில் பேருந்தில் செல்வதற்காக விடியற்காலம் 5.00 மணிக்கு நின்று கொண்டிருந்தேன். என்னுடன் கண்ணாத்தாள் நின்று கொண்டிருந்தார். அப்போது எனது பக்கத்து வீட்டை சார்ந்த பெரியநாயகி என்பவர் டீ சாப்பிடுவதற்காக அங்கு வந்திருந்தார். சம்பவ நேரத்தில் பின்னால் வந்த சென்னை பேருந்து ஒன்று அவர் மீது மோதி அவர் கீழேவிழுந்துவிட்டார். அங்கிருந்த ஆட்கள் அங்கு வந்து அவரை பார்த்தபோது அவருக்கு பின்னந்தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. காயம்பட்ட அவரை ஆம்புலன்ஸில் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். அங்கு பார்க்க முடியாது என்று சொல்லிவிட்டதால் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள். அங்கிருந்து மதுரை வேலாம்மாள் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக தெரிந்து கொண்டேன். நான் பின்னர் வீட்டிற்கு சென்று விட்டேன். நான்கு நாட்கள் சிகிச்சையில் இருந்த அவர் இறந்துவிட்டதாக தெரிந்து கொண்டேன். கோவிலுக்கு செல்லும் அவசரத்தில் இருந்ததால்

பேருந்தின் ஓட்டுநர் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை**

எந்த பேருந்து மோதியது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இறந்த நபர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்த நபருக்கு வயோதிகத்தின் காரணமாக தலை சுற்றல் ஏற்படும் என்றால் சரியல்ல நல்ல நிலைமையில் தான் இருந்தார். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.17 10:45:29 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1377/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கணேசன் | த-பெ | |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 49/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஏசி மெக்கானிக் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.06.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

----------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஏசி மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். கடந்த 06.08.2019 அன்று நான் வீட்டில் இருந்தபோது காலை 6.00 மணியளவில் எனது நண்பர் முத்துராமலிங்கம் என்பவர் எனக்கு தொடர்பு கொண்டு எனது அம்மா பெரியநாயகி என்பவர் காரைக்குடி புதிய பேருந்து நிலையத்திற்கு டீ சாப்பிடுவதற்காக சென்றபோது பெங்களூர் செல்லும் SR பேருந்து அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும் அதனால் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்திருப்பதாக சொன்னார்கள். நான் அங்கு சென்று பார்த்தபோது மருத்துவர்கள் சிவகங்கைக்கு பரிந்துரை செய்தார்கள். அவரை சிவகங்கைக்கு ஆம்புலன்ஸில் சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். பின்னர் மீண்டும் மேல் சிகிச்சைக்காக ஆம்புலன்ஸில் மதுரை வேலாம்மாள் மருத்துவமனைக்கு அழைத்துசென்றோம். இரண்டு நாட்கள் அங்கு சிகிச்சையில் இருந்தார். மருத்துவர்கள் அவருக்கு மூளை சாவு ஏற்பட்டிருப்பதாக சொன்னார்கள். அதனால் அவருடைய உடல் உறுப்புகளை தானம் செய்தோம். மேற்படி விபத்தை ஏற்படுத்திய நபர் கருணாநிதி என்று பின்னர் நான் கேள்விபட்டு தெரிந்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை**

எனது அம்மா வயோதிகத்தின் காரணமாக உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. சம்பவ நேரம் அதிகாலை என்பதால் எனது அம்மாவிற்கு கண் மங்கலாக தெரியும் என்றால் சரியல்ல அப்போது தான் கண் அறுவை சிகிச்சை செய்திருந்தார். பேருந்து நிலையத்தில் இருந்து நிறைய வாகனங்கள் வெளியில் செல்லும் என்றால் சரிதான். ஆகையால் எந்த வாகனம் மோதியது என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரியல்ல. எதிரிதான் விபத்தை ஏற்படுத்தினார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.17 10:45:36 +0530